விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 136 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 21 வியாழக்கிழமை (04.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ‘போரில் வென்ற எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியும்’

### தையிட்டியில் மக்களை எச்சரித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

“போரில் வென்ற எங்களுக்கு உங்களை என்ன செய்வதென்று தெரியும்” என தையிட்டியில் விகாரை அமைப்புக்கு 16



## தையிட்டியில் விகாரைக் காணிகளை விடுவிக்குமாறு கோரி போராட்டம்

### பொலிஸ், இராணுவம் குவிக்கப்பட்டதால் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் விகாரைக் காணி மற்றும் அதனை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி போராட்டம் இடம்பெற்றது. 15



# ஆரியகுளத்தில் வெசாக் நிகழ்வு

## தடையை மீறி அலங்காரம் மேற்கொள்ளும் இராணுவத்தினர்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம் - ஆரியகுளத்தினுள் வெசாக் நிகழ்வுகளுக்கான அலங்காரங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாக தெரியவருகின்றது.

*(16ஆம் பக்கம் பார்க்க)*



கதலி வாழைப்பழத்தை

## பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் திட்டம்

### யாழில் நேற்று ஆரம்பம்



15

ஓகஸ்ட் மாதத்திலிருந்து

## யாழில் கட்டணமானி பொருத்தப்பட்ட ஆட்டோ

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாத முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று புதன் கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் 15

வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின்

## கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகள் விடுவிக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவள திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகள் விடுவிக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் 15

கிளிநொச்சியில் இடம்பெறுகின்ற

## மணல் அகழ்வு, போதை கடத்தலுக்கு பொலிஸாரே பின்புலம்

### சிறீதரன் எம்.பி பகிரங்க குற்றச்சாட்டு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள் என்பவற்றின் பின்னணியில் கிளிநொச்சி பொலிஸாரே இருந்து வருகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவ 15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

**மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின்**

**பரீட்சை வினாத்தாள்**

உள்ளே ☛

## அதிகூடிய மழைவீழ்ச்சி யாழ்ப்பாணத்தில் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வளிமண்டலவியல்திணைக்களம் வெளியிட்ட அறிக்கையிலேயே குறித்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள்காணப் படுகின்றன.

கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் 15

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது

### சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

இலங்கை முழுவதும் அதிகரித்து வரும் போராட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கணிசமாக திருத்த அல்லது முழுவதுமாக கைவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச மன் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# வெதுப்பக பொருட்களின் விலையை குறைக்க முடியாது

## அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம்

எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலை குறைப்புக்கு அமைய பாண் உட்பட வெதுப்பக (பேக்கரி) உணவுப் பொருட்களின் விலையை குறைக்க முடியாது. ஒரு புறம் விலையை குறைத்து மறுபுறம் மூலப்பொருட்களின் விலையை அதிகரிக்கும் போது விலை குறைப்பது சாத்தியமற்றது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்தார்.

பேக்கரி உணவு பொருட்களின் விலை குறைப்பு தொடர்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகிய வற்றின் விலை குறைப்புக்கு அமைய பாண் உட்பட வெதுப்பக உணவு பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது. அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்களினால் எமது தொழிற்துறை பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

ஒருபுறம் விலையை குறைத்து மறு புறம் கோதுமை மா, சீனி, முட்டை ஆகிய வற்றின் விலை பல மடங்கு அதிகரிக் கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலை குறைப்புக்கு அமைய எவ்வாறு பேக்கரி உணவு பொருட்களின் விலையை குறைக்க முடியும்.

மின் கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப் பட்டுள்ளதால் எமது தொழிற்துறை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகள் தொடர்பில் விடய தானத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் பலமுறை கலந்துரையாடி கோரிக்கைகளை முன்வைத்தோம்.

இருப்பினும் எவ்வித பயனும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். (ம-7)

## மனோபாலா காலமானார்



பிரபல தமிழ் திரைப்பட இயக்குநரும் நடிகருமான மனோபாலா (வயது-69) நேற்று காலமானார்.

இவர் இயக்கிய முதல் படமான ஆகாயகங்கை கடந்த 1982ஆம் ஆண்டு வெளியானது. மேலும் இவர் நான் உங்கள் ரசிகன், பிள்ளை நிலா, ஊர்க்காவலன், சிறைப்பறவை சிறகுகள் போன்ற 20க்கும் மேற்பட்ட படங்களை இயக்கியுள்ளார். (ம-7,9)


## விசா தேவைகளுக்கு

லண்டன் Tour விசா தேவைப்படுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
மட்டுப்படுத்தப்பட்ட விசாக்கள் மட்டுமே உள்ளது.

இன்றே பதிவு செய்ய எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Hybrid international hub (pvt) ltd, Jaffna

021 222 1265, 076 250 0098



## மணிவிழா வாழ்த்து



திருமதி தேன்மதி வசந்தராஜா
(ஆங்கில ஆசிரியை)

எமது பாடசாலையில் ஆங்கில பாட ஆசிரியராக கடமையாற்றி இன்று (04.05.2023) மணிவிழாக் காணும் திருமதி தேன்மதி வசந்தராஜா அவர்களை உளமார வாழ்த்துவதோடு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

23.03.1990 - 01.01.1995 - யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்
02.01.1995 - 04.04.2004 - யா/வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலை
05.04.2004 - 09.05.2010 - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி
10.05.2010 - 03.05.2023 - யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

BEST WISHES

அதிபர், ஆசிரியர்கள்
நலன்புரிச்சங்கம்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

(C-6480)



## பதவி வெற்றிடம்

Eu Lanka@forume
(Tamil & English Typist)

கல்வித்தகைமை

- G.C.E A/L
- வயதெல்லை 25-35
- ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
- யாழ் மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்ப முடிவு திகதி 15.05.2023

விண்ணப்பங்களை மின்னஞ்சல் ஊடாகவும் கீழ்காணும் முகவரியிலும் சமர்ப்பிக்க முடியும். (முழுமையான சுயவிபரக்கோவை அவசியம்)

Eu lanka@forum
இல.235,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

rameulanka@gmail.com
021-223 2072
077-271 1181


### தேர்தலில் போட்டியிடவுள்ள

# அரச உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்க அனுமதி

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிட்ட தொகுதிக்கு அப்பால் இடமாற்றங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ள அரசியல் உரிமைகள் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய தற்போது காலவரையறையின்றி தேர்தல் ஒத்தி வைக்கப் பட்டுள்ளமையால் அவர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவால் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

குறித்த பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு வேட்புமனு தாக்கல் செய்துள்ள அரச உத்தியோகத்தர்கள் வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடவுள்ள தேர்தல் வட்டாரங்களில் அமைந்துள்ள அரச நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டிருப்பின் அவர்கள் மீண்டும் கடமைக்கு சமூகமளிப்பதற்கு இயலுமாகும் வகையில் குறித்த தேர்தல் வட்டாரத்திற்கு வெளியே இடமாற்றம் செய்து கடமையில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக பொது நிர்வாக அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7,9)

# அறிவித்தல்

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் 46(1) பிரிவின் கீழ் பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சமாசத்துடன் தொடர்புடைய அங்கத்துவ சங்கங்கள், சமாசத்தில் அக்கறை உடையவர்கள் சமாச செயற்பாடுகள் தொடர்பில் மேற்படி 46 (1) பரிசோதனை தொடர்பான தகவல்கள் தர விரும்பின் 09.05.2023, 10.05.2023,11.05.2023 ஆகிய திகதிகளில் காலை 09.00 மணி தொடக்கம் 01.00 மணி வரை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதான வீதி தாழையடியில் அமைந்துள்ள அலுவலகத்தில் தகவல்களை தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

46 (1) பரிசீலனை உத்தியோகத்தர்கள்

# மரண அறிவித்தல்

தோற்றம்
1937 . 07 . 06



மறைவு
2023 . 05 . 03

## சின்னப்பு கந்தையா

அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கந்தையா அவர்கள் நேற்று (03.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அப்புத்துரை அவர்களின் அன்புச் சகோதரரும் பாஸ்கரன், ஜெயகரன், கருணாகரன், சசிகரன் (சசி பல்பொருள் வாணிபம்), பாமினி, கலாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கலாநிதி, பவானி, இராஜேஸ்வரி, செல்வச்சந்திரா, கமலேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதவன், கீர்த்தனா, கௌதமன், சர்வீனா, பரந்தாமன், பிரதாப், துஷா, சுஜீபன், கிபித்தா, தர்ஜனன், டிக்சனா, சரணியா, துளசிகா, பதுர்ஷன், கிரிசாந், சாஜிதா, பிரஷாந், அதுர்ஷா, சாருஜா, விதுர்ஷா, லிபெக்ஷிகா, தர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் கிருசிகா, டர்ணிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2023) வியாழக்கிழமை 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(15458)

தகவல் -
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நிதியமைச்சரை சந்தித்த அலிசப்ரி

(சீயோல்)

இலங்கை வெளி விவகார அமைச்சர் அலிசப்ரி இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தா ராமனை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

தென்கொரியாவில் இடம்பெறும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மாநாட்டின் போது இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் மிகவும் நெருக்கடியான தருணத்தில் - சவாலான நேரத்தில் இந்தியா வழங்கிய உதவி மற்றும் ஆதரவிற்கும் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்து இந்தியா வழங்கிவரும் ஆதரவிற்கும் இந்திய நிதியமைச்சருக்கு அலிசப்ரி நன்றியை தெரிவித்துள்ளார். (நி)

# மின் கட்டணத்தை 25 சதவீதம் வரை குறைக்க வாய்ப்பு -ஜனக ரத்நாயக்க

**(கொழும்பு)**

**நாட்டின் மின்சார பாவனைக் கட்டணத்தை சுமார் 25% வரையில் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



உலக சந்தையில் எரிபொருள் மற்றும் நிலக்கரியின் விலைகள் பாரியளவில் வீழ்ச்சி யடைந்துள்ள நிலையில் இலங்கையில் மின்கட்டணம் குறையும் நிலை காணப்படு வதாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மின் பாவனைக்கான கட்டணத்தை குறைப்பதற்கு தேவையான சட்ட பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகிறது.

இதேவேளை, கடந்த வருடம் ஓகஸ்ட் மற்றும் இவ் வருடம் ஜனவரி மாதங்களில் மின் கட்டண உயர்வினால் மின் பாவனை 20% குறைந்துள்ளது.

அதே சமயம், மின்சாரக் கட்டணம் 35 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது 65% அதிகரிக்கப் பட்டுள்ளது.

இதன்காரணமாக மின் பாவனை குறைவடைந்துள்ளதாக ஜனக ரத் நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டில் 25 வீதமானோர் விற்றமின் D குறைபாட்டால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள மக்கள் தொகையில் 25 வீதமானோர் விற்றமின் D குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரி வின் மருத்துவ நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களைக் கொண்டு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக் கெடுப்பின் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இது சற்று ஆபத்தான சூழ்நிலையாக உருவாகக்கூடும் எனவும் மருத்துவ நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விற்றமின் D குறைபாட்டைக் குறைக்க, முடிந்த வரை சூரிய ஒளியில் இருப்பது முக்கியமானது.

ஆனால், நாட்டில் தற்போது சூரிய ஒளியின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. எனவே, விற்றமின் D இனை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நீண்ட நேரம் சூரிய ஒளியில் இருக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குழந்தைகள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் விட்டமின் குறைபாடு குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

சில மாதங்களுக்கு ஒரு முறை விற்றமின் குறைபாடு குறித்து மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் மருத்துவ நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி)

# குறைந்த வட்டியில் இலங்கைக்கு கடன் வழங்குமாறு கோரிக்கை




(சியோல்)

இலங்கைக்கு குறைந்த வட்டியில் சலுகைக் கடன்களை வழங்குமாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கோரியுள்ளார்.

தென்கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் அலி சப்ரி, சியோலில் வைத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவை சந்தித்த போது இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை தற்போது உயர்-நடுத்தர வருமானம் கொண்ட நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே குறைந்த வட்டியில் சலுகைக்கடன்களை வழங்க முடியும் என்பதை அமைச்சர் அலிசப்ரி இதன் போது சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேபோன்ற கோரிக்கையை உலக வங்கியும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

# தேங்காய்த் தண்ணீருக்கு அதிக கிராக்கி

(கொழும்பு)

தேங்காய்த் தண்ணீர் மற்றும் இளநீருக்கு வெளிநாட்டு சந்தையில் மிக அதிக தேவை உருவாகி வருவதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு சந்தையில், தேங்காய் நீர் ஒரு ஆற்றல் பானமாக விற்கப்படுகிறது. மேலும் ஒரு லீற்றர் தேங்காய் தண்ணீர் கொண்ட ஒரு பொதி வெளிநாட்டு சந்தையில் 4-5 அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்படுகிறது.

இலங்கையில் இளநீரை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கை வெற்றிகரமாக நடந்து வருகிறது. ஆனால் தேங்காய் தண்ணீரை பொதி செய்து விற்பதில் கவனம் செலுத்துவதில்லை.

நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தியில், உள்நாட்டு நுகர்வு தவிர, பெரும்பாலான தேங்காய்கள் கொப்பரை உற்பத்தித் தொழிலுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

அதிக அளவு தேங்காய் தண்ணீர் வீணாகிறது என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம் கண்டறிந்துள்ளது. எனவே பயன்படுத்தாமல் தூக்கி எறியப்படும் தேங்காய் நீரை பொதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்ட வாய்ப்பு உள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிடுகிறது. (நி)

# 1941 பாடசாலைகளில் விஞ்ஞானத்துறையில் கற்பித்தல் இடம் பெறுவதில்லை

## பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

நாட்டில் உயர்தரத்தைக் கொண்ட 2 ஆயிரத்து 952 பாடசாலைகள் உள்ள நிலையில், ஆயிரத்து 11 பாடசாலைகளில் மாத்திரமே விஞ்ஞானத் துறையில் கற்க முடியும் என பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அண்மையில் இடம் பெற்ற கோப் குழுவின் கூட்டத்தில் இந்த விடயத்தை தெரியப்படுத்திய அவர், ஆயிரத்து 941 பாடசாலைகளில் விஞ்ஞானத் துறையில் கற்பித்தல் இடம் பெறுவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக பிரவேசத்தின் போது ஒரு சில பாடங்களுக்கு நடைமுறைப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்திய குழு, இதன் மூலம் அதிக Z புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியது.

அந்தப் பாடங்களுக்கு உயர் தரப் பரீட்சையின் போதும் நடைமுறைப் பரீட்சை நடத்தப்பட்டு Z புள்ளிகள் வழங்கப்படுவதால் மேலும் நடை முறைப் பரீட்சை அவசியமில்லை என வலியுறுத்தப்பட்டது.

அதற்கமைய, இது தொடர்பில் உடனடியாக முடிவெடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு கோப் குழு பரிந்துரைத்தது.

அதேநேரம், கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தேவையான சட்ட மாற்றங்களை முன் வைக்க வேண்டும் என அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு, பல்கலைக் கழக மானியக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட நப ர்கள் கலாநிதி மற்றும் பேராசி. ரியர் பட்டங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது குறித்து விசேட கவனம் செலு த்தியுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து ரன்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தியது டில்லி

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 44 ஆவது ஆட்டம் நேற்று அகமதாபாத்தில் நடை பெற்றது. இதில் குஜராத் டைட்டன்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் விளையாடின. டாஸ் வென்ற டில்லி கப்பிட்டல்ஸ் முதலில் பட்டிங் செய்தது.

முகமது ஷமியின் வேகப் பந்தில் டெல்லி அணியின் விக்கெட்டுகள் சீட்டுக்கட்டு போல் சரிந்தன. ஆரம்ப வீரர் பில் சால்ட், முதல் பந்திலேயே ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார். அவரைத் தொடர்ந்து வார்னர் 2 ரன், ரிலி ரூசோ 8 ரன், மணீஷ் பாண்டே ஒரு ரன், பிரியம் கார்க் 10 ரன்னில் அவுட் ஆகினர்.

23 ரன்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுக்கள் சரிந்தன. நெருக்கடியான சூழ்நிலையில், அக்சர் பட்டேல் 27 ரன்களும், அதிரடியாக ஆடிய அமான் ஹக்கிம் கான் 51 ரன்களும் எடுத்து நம்பிக்கை அளித்தனர்.

கடைசி நேரத்தில் அதிரடி காட்டிய ரிப்பல் பட்டேல் 23 ரன்கள் விளாசினார். இதனால் டில்லி அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 130 ரன்கள் சேர்த்தது. குஜராத் டைட்டன்ஸ் தரப்பில் முகமது ஷமி 4 விக்கெட்டுகள் கைப்பற்றி அசத்தினார்.

மோகித் சர்மா 2 விக்கெட், ரஷித் கான் ஒரு விக்கெட் எடுத்தனர். இதையடுத்து 131 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் டைட்டன்ஸ் அணி களமிறங்கியது.

இதில் அதிகபட்சமாக ஹர்திக் பாண்ட்யா அரை சதம் எடுத்து 59 ரன்களில் ஆட்டமிழக்காமல் கடைசி வரை விளையாடினார். தொடர்ந்து, அபிநவ் மனோகர் 26 ரன்களும், ராகுல் திவாடியா 20 ரன்களும், சுப்மன் கில் 6 ரன்களும் எடுத்தனர்.

ரஷித் கான் 3 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்த ஆட்டத்தின் முடிவில், குஜராத் டைட்டன்ஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப் பிற்கு 125 ரன்கள் எடுத்து தோல்வியை தழுவியது. இதன்மூலம் டில்லி கப்பிட்டல்ஸ் 5 ரன்கள் வித்தியாசத்தில் குஜராத் டைட்டன்ஸை வீழ்த்தி அபாரமாக வெற்றி பெற்றுள்ளது. (4)




# பெறுகை அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
## சபை நிதி - 2023

01. **தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வியாபாரப் பெயர்பதிவைக் கொண்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. **ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** (தொலைபேசி இலக்கங்கள். 021-222-2700, பக்ஸ் இல 021-222-0138, e.mail npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **04.05.2023**ம் திகதியிலிருந்து **16.05.2023**ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் இடத்திலிருந்து **04.05.2023** ம் திகதியிலிருந்து **16.05.2023** ம் திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2,000/= (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும், கேள்வி ஆவணத்தினை பெறுவதற்கு கோரிக்கை கடிதத்துடன் வியாபாரப் பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** எனும் முகவரிக்கு 17.05.2023 ம் திகதி **புதன்கிழமை** காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 30 (முப்பது) நாட்கள் **(16.06.2023)** வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | மீளளிக் கப்படாத வைப்பு | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/(10)/Acc/Proc/Bicycles-2023 | Procurement of Bicycle | 2.4 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | 2,000.00 | 25,000.00 | 14.07.2023 |
| NP/14/41/(10)/Acc/Proc/Sewing Machine -2023 | Procurement of Sewing Machine | 2.2 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | 2,000.00 | 25,000.00 | 14.07.2023 |

தலைவர்,
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேச சபை (C-6475) 03.05.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுக்கு வரும் ஒப்பந்தம்
# மெஸ்ஸியை அதிரடியாக இடை நீக்கியது PSG




பாரிஸ் செய்ண்ட் ஜெர்மன் அணி நிர்வாகத்தால் அனுமதி அளிக்கப்படாத பயணம் ஒன்றை மேற் கொண்ட காரணத்தால் லியோனல் மெஸ்ஸியை அதிரடியாக இடைநீக்கம் செய்துள்ளது நிர்வாகம்.

PSG அணி நிர்வாகி களின் வெளிப்படையான அனுமதியின்றி சவுதி அரேபியாவிற்கு பயணம் மேற் கொண்ட மெஸ்ஸி இரண்டு வாரங்களுக்கு இடைநீக் கம் செய்யப்பட்டதாக பிரான்ஸ் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து, Troyes அணியுடன் இந்த வார இறுதியிலும், Ajaccio அணியுடன் மே 13 ஆம் திகதி நடக்கும் போட்டிகளில் மெஸ்ஸி களமிறங்க வாய்ப் பில்லை என கூறப்படுகிறது.

PSG அணியுடன் 2021 இல் போடப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கான ஒப்பந்தம் முடிவுக்கு வரும் நிலை யில், PSG அணியில் இருந்து மெஸ்ஸி வெளியேறுவார் என்றே நம்பப்படுகிறது. (4)

## மனித உரிமை...

னிப்புச் சபை கோரியுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) இலங்கையில் மனித உரிமைகளுக்கு அவசர அச்சுறுத்தலாக உள்ளது என்று ஆசியாவுக்கான சட்டப் பணிப்பாளர் கரோலின் நேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் அமைதியான முறையில் போராடுவதற்கான, மனித உரிமைகளை பயன்படுத்தும் மக்களுக்கு எதிராக, பயங்கரவாத குற்றச்சாட்டுகளை விதிக்க இந்த சட்டம் பயன்படுத்தப்படலாம்.

இந்தச் சட்டமூலமானது மறுவடிவம் பெறும் முந்தைய கொடூரமான சட்டத்தை விடவும் ஆபத்தானது என்பதற்கு இலங்கை மக்களின் கூச்சல் சான்றளிக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டால், இலங்கை அதிகாரிகள் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதைப் போன்று, கருத்து உரிமைகளை அடக்குவதற்கு இன்னும் அதிகாரம் பெறுவார்கள்.

இந்த புதிய சட்டத்தை கணிசமான அளவில் திருத்த வேண்டும் அல்லது முழுமையாக கைவிட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை ர்த்து செய்ய வேண்டும். இடைக்காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன் படுத்துவதற்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டும். இந்த சட்டங்களை அமுல்படுத்துவது மனித உரிமைகளை அவமதிக்கும் செயலாகும் என்று தெரிவித்தார். (ம-7,9)

### பூநகரி காற்றாலை மின் உற்பத்தி

# சாதக,பாதக நிலைமைகளை ஆராய்ந்த பின்பே அனுமதி

## அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம்

(முறிகண்டி)

பூநகரி கௌதாரிமுனையில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்னுற்பத்திக்கு மாவட்ட அபிவிருத்திக் குழு அனுமதி வழங்க மறுப்பு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திற்கான அனுமதிக்காக கோரப்பட்டது. அதன் முழுமையான சாதக,பாதக நிலை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தீர்மானிக்க முடிவு எடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் தாம் இதுவரை அறியவில்லை எனவும், இன்றே அறிய முடிந்ததாகவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எஸ்.சிறீதரன், எஸ்.கஜேந்திரன், இது தொடர்பில் ஆராய்ந்தே அனுமதி வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.மன்னார், புத்தளம் உள்ளிட்ட பகுதிகளில் அதானி குடும்பத்தின் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டதாகவும், மன்னாரில் மக்கள் எதிர்ப்பு எழுந்துள்ளதாகவும் தெரிவித்த அவர்கள், இது தொடர்பில் ஆராய்ந்தே வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இவ்விடயம் தொடர்பில் விபரங்களை பெற்று தனியாக கூடி ஆராய்ந்த பின்பே அனுமதி வழங்க முடியும் எனவும் தெரிவித்தனர்.இதன்போது, அதானி நிறுவன ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-100-315)



# வேட்புமனுத் தாக்கல் செய்த அரச ஊழியர்கள் மீண்டும் சேவையில்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்த அரச ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கையளித்த அரச ஊழியர்கள் தாங்கள் போட்டியிடும் தொகுதியைத் தவிர அருகிலுள்ள உள்ளூராட்சித் தொகுதிகளில் வேலையில் ஈடுபட முடியும்.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் வரையில் அரச ஊழியர்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அவதானிப்புக்களை மேற்கொண்டுள்ளது.

குறித்த அவதானிப்புகளை கருத்திற்கொண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புரவினால் அமைச்சரவைக்கு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு உரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தேர்தல் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது என ஜானக வக்கும்புர குறிப்பிட்டுள்ளார். (நி)

# அமெரிக்கா தடைக்கு எதிராக சட்டநடவடிக்கை- கரன்னகொட

(கொழும்பு)

"என் மீதான குற்றச்சாட்டுக்கள் அறிவிக்கப்படாது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சட்ட நடவடிக்கையை விரைவில் எடுக்கவுள்ளேன்" என்று சுட்டிக்காட்டி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கு இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த பிளீட் வசந்த கரன்னகொட கடிதம் அனுப்பியுள்ளார்.

வசந்த கரன்னகொட, கடற்படைத் தளபதியாக இருந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அண்மையில் அறிவித்திருந்தது.

இது தொடர்பிலேயே வசந்த கரன்னகொட அமெரிக்கத் தூதுவருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கடந்த 27ஆம் திகதி வடமேற்கு மாகாண ஆளுநரும் கடற்படையின் முன்னாள் தளபதியுமான எனக்கும் மற்றும் எனது மனைவி அசோகா கரன்னகொடவுக்கும் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்படுவதாக இராஜாங்கச் செயலாளர் அறிவித்தார்.

உரிய நடவடிக்கையின் மூலம் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் சட்ட ரீதியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் எனக்கு அறிவிக்கவில்லை.

எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க விதிக்கப்பட்ட தடை நியாயமற்றது. கடந்த 14 ஆண்டுகளாக நானோ, எனது குடும்பத்தினரோ அமெரிக்காவுக்கான விசா விண்ணப்பத்தைக் கோரவும் இல்லை. ஆகவே, திடீரென எம் மீது தடை அறிவிப்பு விடுக்கப்பட்டமையால் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன்." எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இந்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத்ததும் இலங்கை- இந்திய கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை மற்றும் இந்தியாவின் காரைக்கால் இடையே பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுக்கவுள்ள நிறுவனத்திற்கு இந்திய அரசாங்கத்தின் சில அனுமதிகள் இதுவரை வழங்கப்படவில்லை என துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா . தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்திற்கு அனுமதி கிடைத்தவுடன், பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

எனினும், காங்கேசன் துறையிலிருந்து பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

04.05.2023
சித்திரை 21, வியாழக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 11.47 மணிவரை
சித்திரை முன்னிரவு 9.40 மணிவரை

சுபநேரம் -7.26-8.56 மணிவரை
இராகுகாலம்-1.26-2.56 மணிவரை
சித்திரைச் சித்திரை, சித்தாமிர்தம்,
அக்கினி நாள் ஆரம்பம்,

சந்திராஷ்டமம்-
பூரட்டாதி,
உத்தரட்டாதி.

வளவ ர்

**மேஷம்** – உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** – பெற்றோர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**துலாம்** – புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது,சுப செலவுகள் அதிகரிக்கும், மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.

**மகரம்** – செயற்பாடுகளில் [illegible]விரம் காட்டுவீ[illegible]ள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி கரமானதாக அமையும், ஆரோக்கியமான நாள்.

**ரிஷபம்** – குடும்பத்தில் சுகங்களும்,சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்,செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்** – ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள்,உறவு பகை பாராமல் உதவும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள்.

**விருச்சிகம்** – குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்,சுப செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்** – அலுவலகப் பணிகள் துரிதமாகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** – பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி** – வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பெண்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாக்கு [illegible]

**தனுசு** – நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்,மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும் , [illegible]ண்டு.

**மீனம்** – காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, வரவும் செலவும் சமமாகும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பேறியாக வாழ்பவன் விரைவில் சோறின்றி நீரின்றி வறியவனாவான்.

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இதய சுத்தியுடன் செயற்படுங்கள்

## ஜனாதிபதிக்கு சுரேஷ் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்படாமல் தீர்க்கப்படும் என்று அறிக்கை விடுவதால் மட்டும் நாட்டின் நெருக்கடி தீர்ந்து விடாது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

ஜனாதிபதியின் மே தின உரை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை ஆட்சிசெய்து வரும் அனைத்து அரசாங்கங்களும் இனப்பிரச்சினைத் தீர்வினைக் காலம் கடத்துவதை நோக்கமாகக் கொண்டே பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதுடன் ஆணைக்குழுக்களையும் நியமிக்கின்றார்களே தவிர, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இதய சுத்தியுடனான எண்ணம் இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. சென்றவாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ்க் கட்சிகள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரைச் சந்தித்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அரசியல் நெருக்கடிகள் பற்றிப் பேசியதுடன், முதற்கட்டமாக பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அதற்கு இந்தியா முழுமையான உதவிகள் ஒத்தாசைகளை வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தன. அதனை ஏற்றுக் கொண்டு, பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்ற இந்தியா உதவிக்கரமாக இருக்கும் என்று இந்திய உயர்ஸ்தானிகரும் தனது அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியிருந்தார். இந்நிலையில்தான் இலங்கையின் ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாகவும் இந்த வருட இறுதிக்குள் தீர்வுகாணப்படும் என்றும் கூறியிருக்கின்றார். இன்றையகால கட்டத்தில் புதியஅரசியல் சாசனம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான உடனடி ஏது நிலைகள் இல்லை. எனவே முதற்கட்டமாக தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறும் பொருட்டு, அரசியல் சாசனத்தில் உள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதனைத் தொடர்ந்து ஏற்கனவே அனைத்து ஜனாதிபதிகளும் ஏற்றுக் கொண்டதைப் போன்று, இது முழுமையான தீர்வு இல்லை என்ற அடிப்படையில், இனப்பிரச்சினைக்கான ஒரு முழுமையான தீர்வைக்காண இன்றைய ஜனாதிபதி இதய சுத்தியுடன் செயற்படவேண்டும் என தெரிவித்தார். (4-6)

# வில்லூன்றியில் நாளை சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது. வில்லூன்றி விநாயகராயைத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம் பெறும்.

காலை எட்டு மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என ஆல தர்மபரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (4-6)

# சட்டவிரோத மணல் கடத்தல் இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஊர்காவற்றுறை பகுதிக்கு இரண்டு டிப்பர் வாகனங்களில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மணல் எடுத்து செல்லப்பட்டது.

யாழ்ப்பாணம் மண்டைதீவு பகுதியில் உள்ள பொலிஸ் காவலரணில் டிப்பர்களை மறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் சோதனையிட்ட போது மணல் எடுத்து செல்வதற்கான அனுமதியின்றி கொண்டு செல்லப்படுவதனை பொலிஸார் அறிந்து அதன் சாரதிகள் இருவரையும் கைது செய்ததுடன், டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றினர்.

விசாரணைகளின் பின்னர் சாரதிகளையும் வாகனங்களையும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்தனர். (4-6-33)

# மின்னல் ஏற்படும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

## அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

மின்னல் ஏற்படும்போது பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார். தற்போதுள்ள காலநிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தினங்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவி வருகின்ற சீரற்ற காலநிலை காரணமாக 22 குடும்பங்களை சேர்ந்த 79 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதில் குறிப்பாக சாவகச்சேரி, மருதங்கேணி ஊர்காவற்றுறை, கோப்பாய் பிரதேச பிரிவுகளில் பெரும்பாலான பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன. இதில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 16 குடும்பங்களை சேர்ந்த 56 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது டன் 15 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளது. மேலும் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக் கேணி பகுதியில் ஒரு பாடசாலையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அத்தோடு ஊர்காவற்றுறை பகுதியில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தின் காரணமாக ஐந்து குடும்பத்தை சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு வீடுகளில் காணப்பட்ட மின் உபகரணங்கள் பாதிப்பு அடைந்துள்ளன.

அத்தோடு கோப்பாய் பிரதேசத்தில் மழையின் காரணமாக ஏற்பட்ட மின்னொழுக்கினால் ஒரு வீட்டில் இருந்த ஐவர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த காலநிலை ஒரு வார மாக தொடருமென எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு மேலும் தெரிவித்தனர். (4-6-33)

# வீதியால் சென்ற மு. வண்டி திடீரென தீப்பற்றியது




(சாவகச்சேரி)

ஏ-32 வீதி வழியாக நாவற்குழி நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்று நேற்று புதன்கிழமை காலை தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மன்னாரில் இருந்து நாவற்குழி நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியே இவ்வாறு நாவற்குழியை அண்மித்த நிலையில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இருப்பினும் இதன்போது முச்சக்கரவண்டியில் பயணித்தவர்களுக்கு பாதிப்புகள் எவையும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் கசிவு காரணமாக முச்சக்கரவண்டி தீப்பற்றி எரிந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



இந்தியாவிலிருந்து வருகை தந்த சுதேசி பனை ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையினுடைய 'பனை ஆராய்ச்சி நிறுவனத்தை பார்வையிட்டனர். மேலும் பனைசார் உற்பத்திப் பொருட்களையும் பார்வையிட்டனர். (படம்:சிவசாந்தன்)

# வடக்கில் 1600 முன்பள்ளிகளில் சத்துணவுத் திட்டம் ஆரம்பித்து வைப்பு

(அராலி)

வட மாகாணத்தில் உள்ள சுமார் 1600 முன்பள்ளிகளில் நேற்றைய முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்று மாத காலத்திற்கு இலவச சத்துணவு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை பெறும் நோக்குடன் சத்தான உணவை வழங்கும் நோக்குடன் வடமாகாணத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட முன்பள்ளில் குறித்த திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

உலக வங்கியின் நிதி அனுசரணையில் வடக்கு மாகாண



பிரதம செயலாளர் அலுவலகம் உள்ளூராட்சி அமைச்சு, வட மாகாண கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து குறித்த செயற்றிட்டத்தினை வழி நடத்துகின்றது. (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போது பரவிவரும் காய்ச்சல்

# கொவிட் வைரஸின் மாறுபாடாக இருக்கலாம்

## இலங்கை மருத்துவர் சங்கம்

**(கொழும்பு)**

**தற்போது பரவி வரும் காய்ச்சல் கொவிட் வைரஸின் புதிய மாறுபாடாக இருக்கலாம் என மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.**

நோயின் தன்மையைப் பொறுத்து பல்வேறு வகைகள் இருக்கலாம் என இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் வின்யா ஆரியரத்ன தெரிவித்தார்.

அதுதான் இந்த நோயின் தன்மை. புதியரகங்கள்உருவாகி வருகின்றன. ரகங்களைப் பற்றி நமக்கு நல்ல புரிதல் இல்லை. ரகங்களை ஆய்வு செய்து அவற்றின் அறிக்கைகளைப் பெற நேரம் எடுக்கும். இந்தோனேஷியா, வியட்நாம், சிங்கப்பூர் போன்ற அனைத்து நாட்டிலும், அதிகமான கொவிட் நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக இது இன்ஃப்ளுவன்ஸா போல பரவுவதால், அவற்றை கொவிட் நோயிலிருந்து வேறுபடுத்துவது கடினம். எனவே கொவிட் காலத்தில் பின்பற்றப்பட்ட அதே சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் பின்பற்ற வேண்டியது அவசியம் என அவர் தெரிவித்தார். (நி)

# ஜூலையில் மின் கட்டணத்தில் திருத்தம்

## அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

இந்த வருடம்ஜூலை மாதம் மின்சார விலை மீளாய்வு மற்றும் திருத்தம் செய்யப்பட உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அரசாங்க கொள்கை மற்றும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு அமைய, மின்சார விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் கட்டண விலையை ஆண்டுக்கு இருமுறை மறுஆய்வு செய்து திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் வழங்க புதிய திட்டம்

(கொழும்பு)

பெற்றோரால் பராமரிக்க முடியாத 3 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் நிலையங்களை நிறுவி, அதனூடாக குறித்த குழந்தைகளை பராமரிப்பதற்கான சட்டங்கள் விரைவில் உருவாக்கப்படும் என நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றமை, கொலை செய்யப்படுகின்றமை மற்றும் கைவிடப்படுகின்றமை ஆகிய சம்பவங்களை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் இதுவரை 80 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 60 சிறுவர்கள் கைவிடப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தற்போதைய சட்டத்திற்கு அமைய குழந்தைகளை கைவிட்டுச் செல்லும் பெற்றோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய திருத்தத்திற்கு அமைய குழந்தைகளை நிலையங்களில் ஒப்படைத்துச் செல்லும் பெற்றோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்காக தண்டனை சட்டக்கோவையில் கொண்டு வரப்படவுள்ள திருத்தம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் நீதி அமைச்சின் ஊடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (நி)

## முல்லை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சமாசம்
## வெற்றிடமாக உள்ள 03 பதவிகளுக்கு விண்ணப்பம் கோருகின்றது

**01. பதவி: எழுதுநர்**
**குறியீட்டு இலக்கம் (302/14)**
**பதவிவெற்றிடம் (02)**
**சம்பள அளவுத் திட்டம் (சுற்றறிக்கை 2 /2022)**
17900-155X10-165X10-21100
214800-1860X10-1980X10-253200
**தகைமைகள்(சு.நி 01/2021 இன்படி)**

அ. கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு கால அனுபவம். கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுநர்/ காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ.கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பரீட்சையில் சித்தி/க.பொ.த.சாதாரண தராதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**பதவி:- காவலாளி**
**குறியீட்டு இலக்கம் (315/16)**
**பதவிவெற்றிடம் (01)**
**சம்பள அளவுதிட்டம் சுற்றறிக்கை (2/2022)**
16975-135X10-150-10-19825
203700-1620X10-1800X10-237900
**தகைமைகள்**

அ.கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. 05ம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**பதவி: தொழிலாளி**
**குறியீட்டு இலக்கம் (318/17)**
**பதவி வெற்றிடம் (01)**
**சம்பள அளவுத்திட்டம்**
16615-130X10-145X10-19265
198180-1560X10-1740X10-231180

**தகைமைகள்**

அ. 05 ஆம் தரகல்வி சான்றிதழுடன் சிறந்த தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 2023.05.09 ஆகும்.**

**ஏனைய விடயங்கள்**

01. இப்பதவிகளுக்கு அடிப்படை சம்பளதிட்டங்களுக்கு மேலதிக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய இதர படிகளும் காலத்துக்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

02. தெரிவாகும் விண்ணப்ப தாரிகள் சமாசத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்த தயாராக இருக்க வேண்டும்.

03.விண்ணப்பத்தை பதிவு தபால் மூலம் தலைவர் சி.[illegible] ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(சி-6477) **தலைவர்.**


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மூலம<br>கி.பா: 33<br>உயரம்:178cm<br>தகைமை/தொழில்: BSc,Civil Engineering<br>எதிர்பார்ப்பு: IT படித்த பெண்<br>தொ.இ: B/13514 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:-மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ:G/13522 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 9இல் சூரி, செவ்வாய்<br>உயரம்: 182cm<br>தகைமை/தொழில்: HND,மின்பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: B/13515 | பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: 6<br>உயரம்:160cm<br>தகைமை/தொழில்: BSc Software Engineering<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி (Engineer)<br>தொ.இ:G/13539 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா:176cm<br>உயரம்: A/L (கனடா)<br>தொ.இ: B/13516 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 10<br>உயரம்:168cm<br>தகைமை/தொழில்:Law (சட்டம்)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ:G/13540 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:168cm<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:அழகிய மணமகள்<br>தொ.இ: B/13518 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 65<br>தகைமை/தொழில்: IT பட்டதாரி (வெளிவாரி), முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ:G/13546 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 138

# வாழ்க்கையை மாற்றும் சாவி யாரிடம்

ஒரு ஊர்ல அறிவாளியான ஒரு நபர் இருந்தார் . அவருக்கு கடவுள் பக்தி ரொம்ப அதிகம் .

அடிக்கடி கோவிலுக்கு போய் கடவுளை வேண்டிக்குவார் . அதுக்கப்புறம் காட்டுக்கு சென்று விறகு வெட்டி .அதை கொண்டு போய் விற்பனை செய்வார். ஓரளவுக்கு வருமானம் வந்தது .

அதை வச்சிக்கிட்டு நிம்மதியா வாழ்க்கை நடத்திகிட்டு இருந்தார் . வழமை போல அவர் காட்டுக்கு போகும் போது அங்கே ஒரு நரியை பார்த்தார் . அந்த நரிக்கு முன்னங்கால் இரண்டுமே இல்லை .ஏதோ விபத்துல இழந்துட்டது போல இருக்கு.. அது பாட்டுக்கு ஒரு மரத்தடியில உட்கார்ந்திருப்பதை பார்த்தவுடனே இவர் மனசுல ஒரு சந்தேகம் "இந்த நரிக்கு ரெண்டு காலும் இல்லாத நிலையில் இது எப்படி வேட்டையாடி தன்னுடைய பசியை போக்கி கொள்ள முடியும் ..?" அப்படின்னு யோசிக்க ஆரம்பிச்சார் இப்படி யோசிச்சுகிட்டு இருக்கும் போதே அந்த பக்கமா ஒரு புலி வந்தது.. அதை பார்த்த உடனே ஓடிப் போய் ஒரு மரத்துக்கு பின்னாடி மறைந்திருந்து என்ன நடக்குதுன்னு கவனிக்க ஆரம்பிச்சார்.

அந்தப் புலி ஒரு பெரிய மானை வேட்டையாடி இழுத்துகிட்டு வந்து ...அதை சாப்பிட்டது ... சாப்பிட்டது போக மீதியை அப்படியே அங்கேயே போட்டுட்டு போய்ட்டது...

புலி போன பின் கால் இல்லாத அந்த நரி மெதுவா நகர்ந்து கிட்ட வந்து மிச்சமிருந்ததை எல்லாம் சாப்பிட்டு போய்விட்டது. இவ்வளவையும் மரத்துக்கு பின்னாடி நின்னு நம்ம ஆள் கவனிச்சி பார்த்து கிட்டு இருக்கார் இப்ப அவர் யோசிக்க ஆரம்பிச்சார்.

" ரெண்டு காலும் இல்லாத ஒரு வயசான நரிக்கே ஆண்டவன் சாப்பாடு போடுறான் என்றால் தினமும் கோவிலுக்கு போய் சாமி கும்பிடுற நமக்கு சாப்பாடு போடாம கைவிடுவானா? நமக்கு கடவுள் பக்தி வேற அதிகம்.. நாம எதுக்கு அனாவசியமா வெயில்லயும் மழைலயும் கஷ்டப்படனும் ..? எதுக்காக வேர்வை சிந்தி விறகு வெட்டனும் ...?

இப்படி யோசிச்சார். அதுக்கப்புறம் அவர் காட்டுக்கே போறதில்லை .

கோடலியை தூக்கி எறிந்துவிட்டு பேசாம ஒரு மூலையிலே உக்கார்ந்து இருந்து விட்டு கோவிலுக்கு மட்டும் போயிட்டு வருவார் "கடவுள் நம்மை காப்பாத்துவார் ...அவர் நமக்கு வேண்டிய சாப்பாட்டை கொடுப்பார் "- அப்படின்னு நம்பினார்.., கண்ணை மூடிகிட்டு . கோயில் மண்டபத்துலேயே ஒரு தூண்ல சாஞ்சி உக்காந்துகிட்டார் . ஒவ்வொரு நாளும் போய்கிட்டே இருக்கு ... சாப்பாடு வந்தபாடில்லே.. ! இவர் பசியால் வாடி உடம்பு துரும்பா இளைச்சு போய்டுச்சு .

எலும்பும் தோலுமா ஆயிட்டார் . ஒரு நாள் ராத்திரி நேரம் . கோயில்ல யாருமே இல்லை. இவர் மெதுவா கண்ணை திறந்து கடவுளை பார்த்தார் ... " ஆண்டவா ... என்னுடைய பக்தியிலே உனக்கு நம்பிக்கை இல்லையா .....?" நான் இப்படியே பட்டினி கிடந்து சாக வேண்டியது தானா ? காட்டுல அந்த நரிக்கு புலி மூலமா சாப்பாடு போட்டியே..! அதை பார்த்துட்டு தானே இங்கே வந்தேன் ... என்னை இப்படி தவிக்க விட்டுட்டியே ... இது நியாயமா ?" எனக் கேட்க ஒரு அசரீரி கேட்டது.

மெதுவா கண்ணை திறந்து " முட்டாளே ! நீ பாடம் கற்று கொள்ள வேண்டியது நரி கிட்ட இருந்து இல்லே.. ! புலி கிட்ட இருந்து அப்ப அப்படின்னாராம் உழைத்துச் சாப்பிட்டு மீதியை புலிபோல் இயலாதவர்களுக்கு தானமாக கொடுக்கச் சொன்னாராம் நாம் யாரிடம் இருந்து பாடம் கற்றுக்கொள்ள போகிறோம் என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.

அன்பு வாசகர்களே!

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

# சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)



சர்வதேச ஊடக தினமான நேற்று ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் யாழ். ஊடக அமையத்தினால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் முன்றலில் மதியம் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.அதன் போது , ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும். கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஊடகவியலாளர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (4-6-33)

## சங்காபிஷேகம்

(கரண்வாய்)

கொற்றாவத்தை உப்புக்கிணற்றடி அம்மன் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் - 2023 எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குயாக பூசையுடன் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(4-6-60)

## தேங்காய், பலாக்காய் திருட்டில் ஈடுபட்ட மூவர் மடக்கிப் பிடிப்பு

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு விசுவமடு பகுதியில் தொடர்ச்சியாக தேங்காய் மற்றும் பலாக்காய் திருட்டில் ஈடுபட்டு வந்த மூன்று சந்தேக நபர்கள் அப் பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வாகனம் ஒன்றில் வந்து திருட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே குறித்த சந்தேக நபர்கள் பிடிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)

## இலவச கண்புரை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை தேவைப்படுபவர்களுக்கான அடுத்தகட்ட சத்திரசிகிச்சை முகாம் யாழ். போதனா வைத்தியசாலையில் கண்சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவனினால் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

இச்சத்திர சிகிச்சைமுகாமில் வேலணைப் பிரதேசத்தில் இருந்து சத்திர சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும். இவர்கள் எதிர்வரும் மே 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணை பிரதேச மருத்துவமனைக்கு சமுகமளிக்க வேண்டும்.

அங்கிருந்து இவர்களை யாழ் .போதனா மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல இலவச போக்குவரத்து வசதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி சத்திர சிகிச்சைக்குப் பின்னர் இவர்களை மீள வேலணை பிரதேச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தினால் தொலைபேசி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட சுகாதார பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-8)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித மன்றம் நடத்திய கற்றல் உபகரண கண்காட்சி நேற்று முன்தினம் கலாசாலையில் இடம்பெற்றது. (படம்-சிவ்சாந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 250 |
| தக்காளி | 260 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 250 |
| கரட் | 160 | 220 | 250 |
| பூசணி | 60 | 40 | 50 |
| புடோல் | 100 | 140 | 160 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 350 | 400 |
| வெண்டக்காய் | 120 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 150 |
| பயற்றங்காய் | 280 | 250 | 400 |
| லீக்ஸ் | 250 | 260 | 400 |
| பீற்றூட் | 240 | 150 | 350 |
| கறிமிளகாய் | 250 | 300 | 320 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 |
| போஞ்சி | 300 | 300 | 450 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 160 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-110 |
| இராசவள்ளி | 350 | 280 | 300 |
| வெங்காயப்பூ | --- | --- | 500 |
| முள்ளங்கி | 80 | 100 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்
# விஞ்ஞானம் பகுதி - II

**பகுதி II (A) - அமைப்புக் கட்டுரை வினாக்கள்.**

**பகுதி A இன் எல்லா வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள இடைவெளியில் விடை அளிக்கவும்.**

1. A. சூழல் முகாமைத்துவத்துடன் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள ஒரு வீட்டுத்தோட்டம் கீழே படத்தில் காட்டப்படுள்ளது.




(i) மேலே தரப்பட்டுள்ள வீட்டுத்தோட்டம் சூழல் நேயமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் இரண்டு தருக.

(ii) வீட்டுத் தோட்டத்துக்கான கொம்போஸ்ட்(சேதனப் பசளை) பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக.

(iii) மேலே பட்டத்தில் C என்பது பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றுக்காக பயன்படுத்தப்படும் குப்பைக்கூடை ஆகும். A,B ஆகிய கூடைகளுக்கு இடக்கூடிய பொருத்தமான வகைகளை எழுதுக?

(iv) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள புதுப்பிக்கக்கூடிய சக்தி 2 ஐப் பெயரிடுக.

(v) வீட்டுக்குத் தேவையான தாவர உணவுகளை வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை மூலம் பெற்றுக் கொள்வதால் உணவு மைல் பெறுமானத்தைக் குறைத்துக் கொள்ளலாம். இதனால் கிடைக்கும் அனுகூலம் 1 தருக.

(vi) உயிர்வாயு உற்பத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த அங்கிக் கூட்டம் யாது?

B. மேலே வீட்டுத் தோட்டத்தில் காணப்படக்கூடிய உணவுச் சங்கிலி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

தாவர இலை – மயிர்கொட்டி– கோழி– கழுகு

(i)மேற்படி உணவுச்சங்கிலியில் இரண்டாம்படி நுகரி யாது?

(ii)தாவர இலையில் அடங்கியுள்ள சக்தி 100000 J ஆகும். இங்கு கழுகுக்கு சேரும் சக்தியின் அளவு யாது?

(iii)சக்திப் பாய்ச்சலின் போது அதிக அளவு சக்தி விரயமாக்கப்படும் உயிர்ச் செயன்முறை யாது?


C.(i) நைதரசன் வட்டத்தில் உயிரியல் பதித்தல் என்பதால் கருதுவது யாது?

(ii) தொழிற்சாலை நிலைப்படுத்தலின் போது உருவாக்கப்படும் இரசாயன சேர்வை நீர்நிலைகளைச் சென்றடைவதால் பச்சை அல்காக்கள் பெருகின. மேற்படி செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

(iii) *Pseudomonas, Nitrobacteria* என்பவற்றில் நைத்திரேற்றாக்கத்தில் பங்களிப்புச் செய்யும் பற்றீரியா யாது?

(iv) நைதரசன் குறைபாடு உள்ள மண்ணிலும் அவரைக் குடும்பத் தாவரம் நன்கு வளரக் காரணம் என்ன?

2. (A)




(i) உருளைக்கிழங்குத் தாவரத்தில் இனப்பெருக்கம் நிகழும் நிலக்கீழ்த் தண்டு வகையைக் குறிப்பிடுக?


(ii) உருளைக்கிழங்குத் தாவரத்தின் இனப்பெருக்க முறைக்கும் பூவொன்றின் மூலம் நிகழும் இனப்பெருக்க முறைக்கும் இடையேயான வேறுபாடுகள் 2 தருக.

(iii) மேற்படி பூவில் b எனும் பகுதியில் நிகழும் கலப்பிரிவு முறை எது?

(iv) வெட்டி எடுக்கப்பட்ட உருளைக்கிழங்குச் சீவலுக்கு அயடீன் கரைசல் சேர்த்த போது கருநீல கடும் ஊதா நிறம் தோன்றியது. இதன் மூலம் உருளைக்கிழங்கில் அதிகம் உள்ளது என இனங்காட்டப்பட்ட போசனைக்கூறு எது?

(v) உருளைக்கிழங்கின் மெல்லிய சீவலொன்றை ஒளி நுணுக்குக்காட்டியில் அவதானிக்கும் போது அதிகம் காணப்படும் இழையம் எது?

(B)



(i) யாவும் உவர்நீரில் வாழும்.

(ii) உடற்போர்வையில் கைற்றினால் ஆன புறவன்கூடு.

(iii) தசைப்பாதம் கொண்டிருத்தல்.


(iv) குழாய்ப்பாதங்களால் இடப்பெயர்ச்சி அடைதல்.

(v) உடல் உட்புறமும் வெளிப்புறமும் சமதுண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

(C)

(i) படத்தில் காணப்படும் உபகரணத்தின் பெயர் என்ன?

(ii) மேற்படி உபகரணத்தைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் ஒன்று தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) A.மூலக அணுக்களிற்கிடையே கவர்ச்சி விசை உண்டாவதற்குக் காரணம் அணுக்கள் தாம் உறுதி நிலையை அடைவதற்காக அவற்றின் வலுவளவு ஓட்டு இலத்திரன்களை மீள ஒழுங்குபடுத்தலாகும்.

(i) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கவர்ச்சி விசை என்பது குறிக்கும் பொதுவான பெயர் என்ன?


(ii) அணு II ஐ உடைய X அணு நேர் அயனாக மாறும் முறையை அரை அயன் சமன்பாடு மூலம் காட்டுக.

(iii)அணு X உம் Cl அணுவும் இணைந்து உருவாக்கும் பிணைப்பு யாது?

(iv) X உம் Cl உம் இணைந்துருவாகும் பிணைப்பில் தோன்றும் சேர்வையின் பௌதீக இயல்புகள் இரண்டினை எழுதுக.

(v) காபன் குளோரின் அணுக்களுக்குமிடையே தோன்றும் பிணைப்பின் மூலம் உருவாகும் சேர்வையின் லூயிசின் கட்டமைப்பை வரைக.

(B) ஆய்வுகூடத்தில் $H_2$ வாயு $100cm^3$ உற்பத்தி செய்து சேகரிக்க உருவாக்கப்பட்ட அமைப்புகள் A,B,C கீழே தரப்பட்டுள்ளன.




(i) குறைந்த நேரத்தில் $100cm^3$ $H_2$ வாயு சேகரிக்கக் கூடிய அமைப்பு எது?

(ii) Zn,HCI இடையே நிகழும் தாக்கத்துக்கான ஈடு செய்யப்பட்ட சமன்பாட்டைத் தருக?


(iii) A,B,C அமைப்புகளில் தாக்கவீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை எழுதுக?

a) A மற்றும் B இடையே ..................

b) B மற்றும் C இடையே ..................

(iv) $H_2$ வாயுவின் பயன்கள் 2 தருக?

(C) மின் மூலாமிடலுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.





(i) மேற்படி செயற்பாட்டின்போது இரும்புக்கரண்டி மீது காணக்கூடிய அவதானம் என்ன?

ii) X எனும் கரைசலின் இரசாயனச் சூத்திரத்தை எழுதுக?

(iii) மேற்படி அமைப்பில் அனோட்டில் நிகழும் அரைஅயன் சமன்பாடு யாது?

(IV) மின்பகுப்பு பயன்படும் வேறு சந்தர்ப்பம் ஒன்று தருக?

4. A. அடுக்கு மாடிக் கட்டிட நிர்மாணப்பணி ஒன்றுக்காக மூலப்பொருட்களை மேலே கொண்டு செல்லத் தயார் செய்த அமைப்பை படம் காட்டுகிறது. மேற்படி அமைப்பில் பெட்டியில் மண் நிரப்பப்பட்டுள்ளது. அதன் திணிவு 10 kg ஆகும். X மற்றும் Y இழைகளால் பெட்டி Q ஆனது Z எனும் புள்ளியில் P எனும் கயிற்றுடன் கட்டி வைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மோட்டார் பெட்டியை மேல்நோக்கி செலுத்தத் தேவையான விசையை வழங்குகிறது.($g=10ms^{-2}$)




(i) இப்பெட்டியானது சிறிதளவு உயரத்துக்கு உயர்த்தப்பட்டபோது அதன் மீது தொழிற்படும் விசைகளை படத்தில் குறித்துக் காட்டுக.

(ii) பெட்டி Q ஆனது Z எனும் இடத்தில் தொங்கவிடப்பட்டு சமநிலையில் இருக்குமெனின் இங்கு தொழிற்படும் விசைகள் பற்றிய நிபந்தனைகள் 2 தருக?

(iii) இழை R இல் தொழிற்படும் இழுவை யாது?

(B) மேற்படி படத்திலுள்ள மோட்டார் m ஆனது 230v பிரதான மின் வழங்கலுடன் தொடுக்கப்பட்டுள்ளது.


(i) மோட்டாரின் மீது 1000W என குறிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் விளக்கப்படுவது யாது?

(ii) பெட்டி Q ஐ மேலுயர்த்த மோட்டருக்கு 5 நிமிடங்கள் எடுத்தன. இதன்போது செலவாகும் மின் சக்தியின் அளவு யாது?

(iii) பெட்டி Q 10m மேலே உயர்த்தப்பட்டபோது அதில் சேமிக்கப்பட்ட அழுத்த சக்தியைக் காண்க.

(C) புவியீர்ப்பின் கீழ் சுயாதீனமாக தரை மீது விழும் ஒரு பொருளின் வேகம் நேரத்துடன் மாறுபடும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

| நேரம்(s) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| வேகம்($ms^1$) | 0 | 10 | 20 | 30 | 40 | 50 |



(i) மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி வேக நேர வரைபை வரைக.

(ii) மேற்படி பொருள் தரையில் இருந்து எவ்வளவு உயரத்தில் இருந்து எனக் கணிக்க

(ii) பொருளின் திணிவு 0.5kg ஆகும். தரையில் விழும் போது அப்பொருள் கொண்டுள்ள உந்தத்தைக் காண்க.

(பகுதி B நாளை...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 22.04.2023 முதல் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். வருமானம் உயரும். உத்தியோகத்தில் உயர் நிலை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். 6 இல் குரு வருகின்ற பொழுது அதன் பார்வை பலத்தால் மிகச் சிறந்த பலன்களை அடையப் போகின்றீர்கள். தன-பஞ்சமாதிபதியாக விளங்கும் குரு தாராளமாகச் செலவு செய்யவும் ஏராளமான பொருள் மற்றும் இடம், பூமி வாங்கவும் வழிவகுத்துக் கொடுப்பார்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

நவக்கிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் குரு பகவான் உங்கள் இராசிக்கு தன-பஞ்சமாதிபதியாகவும் பூர்வ. புண்ணிய ஸ்தானாதிபதியாகவும் விளங்குபவர். அவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிரிகளின் தொல்லை குறையும். எனவே

# வாகனம் வாங்கும் யோகம் உண்டு



இதுவரை இருந்த இடையூறு சக்திகள் எல்லாம் அகன்று ஓடும். இனிய பலன்கள் உங்களைத் தேடி வரும். கடன் சுமை குறையும். காரிய வெற்றிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம் வரலாம். தேவகுரு ஆறில் வந்தால் தேவைகள் பூர்த்தியாகும்! ஆவல்கள் தீர வேண்டின் அனுசரிப்புத் தேவையாகும்! கோபத்தை விலக்கினால் தான் குடும்பத்தில் அமைதி கூடும்! தீபத்தில் குருவைக் கண்டு தரிசித்தால் நன்மை சேரும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் 6 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது உங்களுடைய அன்றாடத் தேவைகள் பூர்த்தியாகும். முன்கோபத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்வது நல்லது. பிறரைச் சார்ந்து இருப்பவர்கள் தனித்து இயங்கும் வல்லமை பெறும் நேரமிது.

**வெற்றியைக் கொடுக்கும் வியாழனின் பார்வை!**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின்றார். எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து நல்ல பலன்களை அள்ளி வழங்கப் போகிறது. வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இரண்டாமிடத்தைக் குரு பார்ப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பொருளாதார நிலை உயரும். தொழில் வெற்றிநடை போடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கும். 10 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் முத்தான தொழில்கள் வாய்க்கும். புதிய கிளைத்தொழில்கள் தொடங்கும் யோகங்களும் ஒரு சிலருக்கு வந்து சேரும். புகழ் மிக்கவர்கள், உங்களுக்குப் பின்னணியாக இருந்து பிற காரியங்களை முடித்துக் கொடுப்பர். பெற்றோர்களின் உடல்நலத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் சுபவிரயங்கள் உண்டாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நீண்டதூரத்தில் பணிபுரியும் உறவினர்கள் உங்கள் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வர். பெற்றோர்களின் மணிவிழா, முத்துவிழா, பவளவிழா போன்ற விழாக்களும் பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகளும் கெட்டிமேளம் கொட்டும் வாய்ப்பும் குருவின் பார்வையால் வந்து சேரும். மாற்று மருத்துவம் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ள வழிகாட்டும்.

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

**நட்சத்திரப்பாதசாரப்படி பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கின்றார். அந்த நேரத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. எந்த ஒரு காரியத்தையும் பிறரிடம் ஒப்படைக்கக் கூடாது. உங்கள் மேற்பார்வையிலேயே அனைத்துச் செயற்பாடுகளையும் வைத்துக் கொள்ளவும். உத்தியோகத்தில் இருந்து விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பரணி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குருபகவான் பரணி நட்சத்திரக்காலில் சுக்கிர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே கல்யாணக் கனவுகள் நனவாகும். பெற்றோர்களின் மணிவிழா, கட்டடத் திறப்பு விழா, கடைதிறப்பு விழாக்கள் நடைபெற வழிபிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும் நேரமிது. ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். வாடகைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பதவிகளும் பொறுப்புகளும் கிடைக்கும். கார்த்திகை நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். நாட்டுப்பற்று மிக்கவர்களால் உங்கள் கூட்டு முயற்சி வெற்றி பெறும். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்கு தலைமைப் பதவிகள் வரலாம். தனவரவு தாராளமாக வந்து சேரும். தொழில் ஸ்தானாதிபதியான சூரியன் சாரத்தில் குரு பகவான் உலா வருவதால் இக்காலத்தில் கிளைத்தொழில் தொடங்கும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகள் கேட்ட சலுகைகளை வழங்குவர். இக்காலம் ஒரு பொற்காலமாகும்.

**ராகு-கேதுப் பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கிறார்கள். உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்தில் கேதுவும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிப்பதால் தொட்டது துலங்கும். தொழில் வளம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவோடு புதிய திருப்பங்களைக் காணப்போகிறீர்கள். புகழ், கீர்த்தி அதிகரிக்கும். உடல்நலம் சீராகும். வெளிநாட்டிலிருந்து ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். இதுவரை ராகு, குருவுடன் சேர்ந்திருந்தது. இப்பொழுது ராகு விலகிவிட்டதால் குரு பகவான் பலம் பெறுகின்றார். எனவே ராகு-கேதுக்களுக்குரிய நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்வது நன்மை தரும்.

**குருவின் வக்கிர காலம்!**

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக்காலில் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். எனவே அவரது வக்கிர காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு குறையும். கூட்டாளிகளின் மீது நம்பிக்கை ஏற்படாது. ஆடம்பரப் பொருட்களை வாங்க அதிகம் செலவிடுவீர்கள். ஒருசில காரியங்கள் நடைபெறுவதில் குழப்பங்கள் ஏற்படலாம். அனுபவஸ்தர்களின் ஆலோசனைகள் அவ்வப்போது கைகொடுக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். வியாழன் விரதமும் குரு வழிபாடும் இக்காலத்தில் வெற்றியை வழங்கும்.




**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடைபெறும். தேவைக்கேற்ற பணம் அவ்வப்போது வந்து கொண்டேயிருக்கும். குடும்பத்தில் மங்கல ஓசையும் மழலையின் ஓசையும் கேட்கும் சூழ்நிலை உண்டு. கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு தொடரும். அவர்களின் சுபகாரியங்கள் நடைபெறுவதற்காக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்தில் பாராட்டுக்களும் திறமைக்குரிய அங்கீகாரமும் கிடைக்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜையறையில் சூரிய பகவான் படம் வைத்து விளக்கேற்றி வழிபடுவது நல்லது. ஞாயிறுதோறும் விரதமிருந்து சூரிய கவசம் பாடி வழிபட்டால் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

169





என்ன செய்கிறேன், பார்! எருமை மாடு அல்லிக் கொடியைக் .காலில் வைத்து நசுக்குவது போல் நசுக்கி எறிகிறேன், பார்! இன்னும் அவளை அவளை.." என்று பழுவேட்டரையர், கோபாவேசத்தினால் பேச முடியாது தத்தளித்தார். அவர் முகம் அடைந்த கோர சொரூபத்தை வர்ணிக்க முடியாது.

நந்தினி அவரைச் சாந்தப்படுத்த முயன்றாள். அவருடைய இரும்புக் கையைத் தன் பூவையொத்த கரத்தினால் பற்றி விரல்களோடு விரல்களை இணைத்துக் கோத்துக் கொண்டாள்.

"நாதா! எனக்கு நேர்ந்த அவமானத்தைத் தாங்கள் பொறுக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மத்தகஜத்தின் மண்டையைப் பிளந்து இரத்தத்தைக் குடிக்கும் வலிமையுள்ள சிங்கம், கேவலம் ஒரு பூனையின் மீது பாய முடியாது.

குந்தவை ஒரு பெண் பூனை. ஆனால் பெரிய மந்திரக்காரி. மாயமும் மந்திரமும் செய்து தான் எல்லோரையும் அவள் இஷ்டம் போல் ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாள்! இந்தச் சோழ ராஜ்யத்தையே ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாள்! அவளுடைய மந்திரத்தை மாற்று மந்திரத்தால் தான் வெல்ல வேண்டும். தங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் சொல்லி விடுங்கள். இன்றைக்கே நான் இந்த மாளிகையை விட்டு வெளியேறுகிறேன்" என்று கூறி மீண்டும் விம்மினாள்.

பழுவேட்டரையரின் கோப வெறி தணிந்தது. மோக வெறி மிகுந்தது.

"வேண்டாம் வேண்டாம்! ஆயிரம் மந்திரவாதிகளை வேண்டுமானாலும் அழைத்து வைத்துக்கொள். நீ போக வேண்டாம்! என் உயிர் அனையவள் நீ! அனையவள் என்ன? என் உயிரே நீதான்! உயிர் போய்விட்டால் அப்புறம் இந்த உடம்பு என்ன செய்யும்? இப்போதே என்னை நீ விலக்கி வைத்திருப்பது என்னை உயிரோடு வைத்துக் கொல்கிறது! இத்தனை மந்திரம் தெரிந்து வைத்திருக்கிறாயே? எனக்கு ஒரு மந்திரம் சொல்லித் தரக்கூடாதா?" என்றார்.

"நாதா! உங்கள் கையில் வாளும் வேலும் இருக்கும் போது மந்திரம் எதற்கு? பேதைப் பெண்ணாகிய என்னிடம் விட்டு விடுங்கள் மாய மந்திரங்களை! தங்களுக்கு எதற்கு மாயமும் மந்திரமும்?" என்றாள் நந்தினி.


"கண்ணே! நீ உன் பவள வாய் திறந்து 'நாதா' என்று அழைக்கும்போதே என் உடம்பு சிலிர்க்கிறது.உன் பொன் முகத்தைப் பார்த்தால் என் மதி சுழல்கிறது! என் கையில் வாளும் வேலும் இருப்பது உண்மைதான். அதையெல்லாம் போர்க்களத்தில் பகைவர்களைத் தாக்குவதற்கு உபயோகிப்பேன்.

ஆனால் அந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு இந்தக் கொடி மண்டபத்தில் என்ன செய்வேன்? மன்மதனுடைய பாணங்களுக்கு எதிர்ப் பாணம் என்னிடம் ஒன்றுமில்லையே? உன்னிடம் அல்லவா இருக்கிறது? எனக்கு மந்திரம் எதற்காக என்று கேட்கிறாய்! என் உடலையும் உயிரையும் ஓயாமல் எரித்துக் கொண்டிருக்கிறதே, அந்தத் தீயைத் தணிப்பதற்காகத்தான்! அதற்கு ஏதாவது மந்திரம் உனக்குத் தெரிந்திருந்தால் சொல்லு! இல்லையென்றால், உன் பூ மேனியைத் தொட்டு மகிழும் பாக்கியத்தை எனக்குக் கொடு! எப்படியாவது என் உயிரைக் காப்பாற்று! கண்மணி! உலகம் அறிய சாஸ்திர விதிப்படி நீயும் நானும் மணந்து இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன! ஆயினும் நாம் உலக வழக்கப்படி இல்வாழ்க்கை நடத்த ஆரம்பிக்கவில்லை.

(தொடரும்)




## எறும்பு, பூரான் வல்லவர் யார் ?



தரையில் எறும்பு மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. அப்போது பூரான் அதன் அருகே வந்தது.

"நண்பா! நான் வருவதைக் கூடக் கவனிக்காமல் எங்கே சென்று கொண்டிருக்கிறாய்?" என்று எறும்பிடம் கேட்டது.

எறும்பு "பூரான் நண்பா! உன்னைக் கவனித்துக் கொண்டிருந்தால் என் கடமையை நான் சரிவரச் செய்ய முடியாதே" என்று ஊர்ந்து கொண்டே சொன்னது. "அப்படியென்ன முக்கியமான கடமை?" என்று பூரான் கேட்டது.

எறும்பும் ஊர்வதை நிறுத்தாமல் "மழைக் காலத்திற்குத் தேவையான உணவை வெயில் காலத்திலேயே தேடிச் சேர்த்து வைப்பது என் கடமை. உன்னிடம் பேசிக் கொண்டிருந்தால் என் கடமையைச் செய்ய முடியாது" என்று கூறிச் சென்று விட்டது.

பூரான், எறும்பு தன்னை ஏமாற்றி விட்டதாகக் கருதியது. எறும்பை மட்டம் தட்டியே தீர வேண்டும் என்று நினைத்துக் கொண்டது.

அடுத்த நாள் எறும்பு வரும் வழியில் நின்று அதை வழி மறித்தது. "எறும்பே, கடமையை சரிவரச் செய்வதால் மட்டும் நீ வல்லவனாக முடியாது!. உன்னால் என்னைப் போல வேகமாக ஊர்ந்து வர முடியுமா? அப்படி வந்தால் நீ என்னை விட வல்லவன் என்று ஒத்துக் கொள்கிறேன்" என்று கேட்டது.

அதற்கு எறும்பு "வீண் பேச்சு வேண்டாமே. நான் என் கடமையைச் செய்ய விடேன்" என்று பணிவாகக் கேட்டது.

பூரான் "தப்பித்து ஓடப் பார்க்காதே!" என்று கேலி செய்தது. அதற்கு எறும்பு மிக அமைதியுடன் "பூரானே. உன் அளவுக்கு வேகமாக என்னால் ஊர முடியாது. அந்த தைரியத்தில் நீ பேசுகிறாய். ஆனால், நான் செய்யும் சில காரியங்களை உன்னாலும் செய்ய முடியாது. அதனால் யார் வலியவன் என்ற பரீட்சையெல்லாம் வேண்டாம்" என்று திரும்பவும் கூறியது.

பூரானோ "அப்படி என்ன சாகசத்தை நீ கிழித்து விடப் போகிறாய். சாதூரியமாகப் பேசக் கற்று வைத்திருக்கிறாய்" என்று கூறியது.

எறும்பு பூரானை பதில் பேசாமல் ஒரு தண்ணீர்த் தொட்டியின் அருகில் அழைத்துச் சென்றது. பூரானை வேடிக்கை பார்க்கச் சொல்லி விட்டு கரையின் அருகில் இருந்த ஒரு துரும்பில் தொற்றிக்கொண்டு தண்ணீரில் விழுந்து அந்த துரும்பைப் பற்றிக் கொண்டு தண்ணீரில் மிதந்தது. பூரானைப் பார்த்து "உன்னால் இப்படிச் செய்து காட்ட முடியுமா?" என்று கேட்டது.

பூரானுக்கு அப்போதுதான் எல்லோருக்கும் சில வல்லமைகளும் சில இயலாமைகளும் இயற்கையிலேயே உண்டு என்று புரிந்தது. எறும்பிடம் மன்னிப்புக் கேட்டது.

அன்றிலிருந்து பூரான் எறும்பின் கருத்துகளை மதித்து நடந்து அதற்குச் சிறந்த நண்பனாகத் திகழ்ந்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர் காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறான்.
– நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலம் என்பது தெய்வத்தால் இசைக்கப்படும் இராகம்

அர்த்தமுள்ள இந்து மதம் என்ற நூலை எழுதிய கவியரசு கண்ணதாசன் அதனைப் பத்துப் பாகங்களாகப் பிரித்து இந்து மதத் தத்துவப் பிரவாகத்தை தெளிவாக எடுத்துரைத்தார்.

அதில் ஓர் இடத்தில், காலம் என்பதைக் குறிப்பிடும் கவியரசர் கண்ணதாசன்; காலம் என்பது தெய்வத்தால் இசைக்கப்படும் இராகம் என்கிறார்.

ஆம், இசை மீட்கப்படும்போது கேட்கப்பட வேண்டியதும் உய்த்துணர்ந்து அனுபவிக்க வேண்டியதுமாகும்.

இராகம் இசைக்கப்படும்போது அதனை கேட்கத் தவறுவோமாயின், அது அதனோடு முடிந்து போகும்.

ஆக, இறைவனால் இசைக்கப்படும் காலம் என்ற இராகத்தை நாம் தவறவிடுவோமாயின், அது இறந்த காலமாகவே அமைந்துபோகும்.

உண்மை. கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிடுவோமாயின், அதுவே நம்மை இழித்துரைக்கும். வருத்தும். இதர துன்பங்களையும் கஷ்டங்களையும் தந்தாகும்.

இதைத்தான் காலம் பிழைத்து விட்டதென்கின்றோம்.

காலப் பிழை என்பது காலத்தை நாம் தவறவிட்ட பிழையைக் குறிப்பதாகும்.

இனி, நாம் பிரஸ்தாபிக்க வந்த விடயத்தைப் பார்க்கலாம்.

இப்போது நம் இலங்கைத் திருநாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து சற்று ஆறுதல் அடைவதை முழுமையான விடுதலை என்று யார் கருதினாலும் அதைவிட்ட அபத்தம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வியூகங்களை பொருளாதார நிபுணர்கள் முன்வைக்கின்றனர்.

அவர்கள் முன்வைக்கின்ற பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் அரசு தீவிரம் காட்டுகிறது.

அந்த வகையில் அரசாங்கத்துக்கு முழுமையாகவும் அரைப்பங்காகவும் இருக்கக்கூடிய நிறுவனங்களை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது.

இதில் விமான சேவைகள், தொலைத்தொடர்பு சேவைகள் என்பவை உள்ளிட்ட நிறுவனங்களை தனியாருக்கு கையளிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

இந்த இடத்தில்தான் நம் புலம்பெயர் தமிழ் உறவுகள் இவற்றின் மீது முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

இவ்வாறு முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டுக்கும் நம் மக்களுக்கும் பேருதவி புரிய முடியும்.

இதற்கு மேலாக, பகிரங்கப்படுத்த முடியாத நன்மைகளும் நமக்கு உண்டு.

ஆகவே நம் புலம்பெயர் உறவுகள் இது விடயத்தில் கருசனையாக இருப்பது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதாக இருக்கும்.

அதாவது, இறைவனால் இசைக்கப்படும் காலம். எனும் இராகத்தை முழுமையாக நுகர்ந்தவர்களாக நம்மை நாம் ஆக்க முடியும் என்பதால், பொருத்தமான முதலீடுகளைச் செய்வது மிகவும் அவசியமாகும்.

# மக்கள் நலத்திட்டங்களை அமுல்படுத்த எவ்வித அரசியல் வேறுபாடு கிடையாது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மக்கள் நலத் திட்டங்களை அமுல்படுத்த எவ்வித அரசியல் வேறுபாடு கிடையாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிடைக்கின்ற வாய்ப்புக்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் எனவும் அதற்கான ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் மக்கள் பிரதிநிதிகள் வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில்சார் முன்னேற்றங்களுக்காக 1650 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்திருப்பதாகவும் அதேபோன்று வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கான வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக சீனா 1500 மில்லியன் ரூபாய்களை வழங்க முன்வந்துள்ளதுடன் இந்தியாவும் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், எமது மக்களுக்கு கிடைக்கின்ற இவ்வாறான வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதில் அரசியல் பாகுபாடு கிடையாது எனவும் தெரிவித்தார்.

மேலும் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அச்சுறுத்தலாக காணப்படும் சட்ட விரோத மணல் அகழ்வு மற்றும் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பாக ஆராயப்பட்டதுடன் குறித்த விடயம் தொடர்பாக விசேட கூட்டம் ஒன்றினை நடத்தி விரிவாக ஆராய்ந்து உறுதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகள் நீர்ப்பாசனம் சார்பான ஒழுங்குபடுத்தல்கள், கிளிநொச்சி நகர அபிவிருத்தி திட்டம் போன்ற பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டதுடன் சில விடயங்களுக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியும் வழங்கப்பட்டது. • (ம-7,9,315)

## லாஃப்ஸ் சிலிண்டரின் விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் (Laugh Gas) விலையில் எந்த மாற்றமும் இல்லை என அந்நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு காரணமாக உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகள் அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறான சவாலுக்கு மத்தியிலும் லாஃப்ஸ் சமையல் எரிவாயு வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் எரிவாயுவை தொடர்ந்து வழங்குவதாக நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

அதன்படி லாஃப்ஸ் சமையல் எரிவாயு 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 3,990 ரூபாவாகவும் 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 1,596 ரூபா வாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (ம-7,9)

போலி நாணயத்தாள்களுடன்

## யாழில் கடமையாற்றும் இராணுவ வீரர் கைது

(யாழ்ப்பாணம்)

ஐயாயிரம் ரூபாய்போலி நாணயத்தாள் வைத்திருந்ததாகக் கூறப்படும் இராணுவ வீரர் ஒருவர் சந்தேகத்தின்பேரில்மஹறவ தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வாசவிளான் இராணுவ முகாமில் கடமையாற்றும் மொரகொல்லாகம பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான இராணுவ வீரர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் இராணுவ முகாமில் இருந்து விடுமுறையில் சென்றிருந்த போது போலி நாணயத்தாள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்குரிய இராணுவ வீரர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹறவ தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## சித்திராப் பூரணை

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சித்திராப் பூரணை உற்சவத்தில் நாளை வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, விசேஷ பூஜை என்பன நடைபெறும் என்று பிரதமகுரு சிவ ஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## சாவகச்சேரி நகர் பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரின் அதிரடி நடவடிக்கை காரணமாக நேற்று புதன் கிழமை பிற்பகல் கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகர் பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் நடமாடுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 3710 மில்லிகிராம் கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த மன்னார் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மதுவரி நிலைய மதுவரிப் பரிசோதகர் ரஷிகரன் தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். கைதான இருவரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 16ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7,9,30)

## வடமராட்சி பகுதியில் மோ.சைக்கிள் திருட்டு

வடமராட்சி பகுதியில் குருக்கள் ஒருவரின் வீட்டில் நின்றிருந்த மோட்டார் சைக்கிள் அதிகாலை வேளையில் கொள்ளையர்களால் திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறையிட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகின்றது.

வானர் குடியிருப்பு சொக்கன்கலட்டி முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குருவான மண்டலேசக் குருக்கள் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ம-7,9)

## புகையிரதத்துடன் மோதி ஆட்டோ விபத்து
### இருவர் உயிரிழப்பு

வெலிகம பெலியான பொரஹ புகையிரத கடவையில் முச்சக்கர வண்டியொன்று புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நான்கு பேர் காயமடைந்து மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர. (ம-7)

அம்பாறை பொத்துவிலில்

## கஜமுத்துக்களை கடத்திய இருவர் பொலிஸாரால் கைது

அம்பாறை - பொத்துவில் பகுதியில் 2 கஜமுத்துக்களை கடத்திச் சென்ற சந்தேகநபர் இருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து பொத்துவில் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சோதனை நடவடிக்கையின் போது 2 கஜமுத்துக்களை கடத்திவந்த 60 மற்றும் 37 வயதுடைய இரு சந்தேக நபர்களை மாறுவேடத்தில் சென்ற விசேட அதிரடிப் படை அணி கைது செய்ததுடன் கஜமுத்துக்கள் மற்றும் இதர சான்றுப் பொருட்களை பொத்துவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும்சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I




03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

சிறிய குளங்கள் மற்றும் ஆழம் குறைந்த நீர்நிலைகளில் மீன், இறால், நண்டு போன்றவற்றைப் பிடிக்க இது பயன்படும். மீன்கள் செறிவாக உள்ள பகுதிகளில் இதனைக் குத்தி இக்கரப்பின் மேற்பகுதியில் காணப்படும் வாய் போன்ற துவாரத்தினூடாக தமது கையை உட்செலுத்தி உள்ளே இருக்கும் மீன்களை உயிருடன் பிடித்தெடுப்பர்.(இதன் அடிப் பாகம் திறந்த படி இருக்கும்). இம் முறையில் அதிகமான மீன்கள் பிடிபட மாட்டா.

இம்முறை தற்போது மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகின்றது. இராக் காலத்தில் ஆழங்குறைவான நீர்ப் பிரதேசத்தில் இறங்கி சூள் ஒளியுடன் இந்த மீன்பிடி மேற்கொள்ளப்படும். கடனீரேரி, சதுப்பு நிலங்கள் போன்றவற்றில் இம் முறை பயன்படுத்தப்படும்.

தனி ஒருவரால் பயன்படுத்தப்படும் கரப்பானது அன்றாடம் ஜீவனோபாய தேவைகளை நிறைவு செய்யப் போதுமானது. இதுபொதுவாக சிறுதடிகள் மற்றும் வரிச்சிக் கயிறு என்பவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும். இவ்வாறு வெளிநாடுகளிலும் கரப்பு குத்தி மீன்பிடிக்கும் முறையுள்ளது. கரப்புகளின் வடிவங்கள் சிறிது வேறுபடலாம்.





### மண்டாமுறை மீன்பிடி

படத்தில் (படம்-2) காட்டப்பட்டுள்ள மண்டாவானது வள்ளத்திலிருந்து கொண்டு ஓடும் மீன்களையும், நண்டு, திருக்கை, அட்டை, சிங்கறால் போன்றவற்றை இலகுவாக குத்தி எடுக்க பயன்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் இது பயன்படுத்தப்பட்டு வந்தன. சில இடங்களில் இது தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு பகுதிகளில் இவ்வமைப்பை ஒத்த மண்டாவானது (படம்-3), குறிபார்த்து எறிந்துபிடிக்க பயன்படுத்தப்படுகின்றது.கைப்பிடி தடியின் மறுமுனையில் கைக்கயிறு நீளத்தில் விடப்படுகின்றது. மண்டாவை எறிந்த பின்னர் கயிற்றின் உதவியுடன் அது இழுத்து எடுக்கப்படுகின்றது.

மண்டாவால் எறிந்து மீன் பிடிக்கும் இன்னும் ஓர் தொழில்நுட்பமாக மீன் வரும் வரை ஓர் நிலையான பகுதியில் காத்திருந்து இரையை நீரினுள் எறிந்து அந்த இரையை எடுக்க வரும் மீன்களை மண்டாவால் எறிந்தும் பிடிப்பர். இங்கு நிலையான பகுதி என குறிப்பிடப்படுவது நீர்நிலையில் உள்ள கல் அல்லது மீன் பிடிப்பதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட அமைப்பு ஆகும். நாம் பயன்படுத்தும் மண்டாவின் அலகின் அளவினை கொண்டு மீனின் அளவு மாறுபடும். நடுத்தரமான அளவு மண்டாவால் எறிந்து பிடிக்கப்படும் மீன் பொதுவாக 5-6Kg இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.




### கூரிய ஆயுதங்களால் குத்தி மீன்களைப் பிடித்தல்

இவ்வாயுதமும் மண்டா போன்றதே. கடற்கரைக்கு அண்மையில் உள்ள கடலிலும் கடனேரிகளிலும் இம்முறையில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இது மிகப் புராதனமான மீன்பிடித்தல் முறையாகும். புத்தளக் கடனேரியில் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலந் தொட்டு இம்முறை கையாளப்பட்டு வருகிறது. இம் முறையில் மீன் பிடிப்பதற்காக ஒரு கூரிய ஆயுதமே (படம்-4) பயன்படுத்தப்படுகிறது. ஒரு கம்புப் பிடியில் கூர்மையான ஓர் இரும்பு பொருத்தப்பட்டிருக்கும். ஐந்து முனைகளைக் கொண்ட ஆயுதங்களும் இதன் நிமித்தம் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வுபகரணத்தைக்கையாள போதுமான தேர்ச்சி அவசியமாகும். இவை வெவ்வேறுபட்ட நீளங்களில் தயாரிக்கப்படுகின்றன.

**இரவு நேரத்தில் மீன்களை ஈர்ப்பதற்காகப் படகில் எரியும் விளக்கைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.**





இரு மீனவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு படகில் மீன்கள் நடமாடும் இடத்தை நோக்கிச் செல்வார்கள் ஒரு மீனவன் படகைச் செலுத்துவான். அடுத்த மீனவன் ஒரு மீனைக் கண்டவுடன் மேற்படி கூரிய ஆயுதத்தால் குத்தி அதனைப் பிடித்துக் கொள்வான். இரவு நேரத்தில் மீன்களை ஈர்ப்பதற்காகப் படகில் கொண்டு செல்லும் விளக்கைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

### அத்தாங்கு (கைவலை)

கிழக்கிலங்கையில் பாவிக்கப்படும் பாரம்பரிய மீன்பிடி முறைகளில் அத்தாங்கு முறை மீன்பிடி முறையும் குறிப்பிடத்தக்கது. இது மட்டக்களப்பில் கன்னங்குடா, தேத்தாத்தீவு, குருக்கள்மடம் போன்ற இடங்களில் தற்போதும் நடை முறையில் உள்ளது. பொதுவாக பெண்களே அத்தாங்கு முறையை பயன்படுத்தி மீன்பிடிப்பது வழக்கம்.

இது கூம்பு வடிவமுடைய வலையாகும் (படம்-5). இதன் திறந்த பகுதி அதாவது வாய்ப்பகுதி பொதுவாக வட்டமாக இருக்கும். வாய்ப் பகுதியில் உள்ள வளையம் கம்பியினால் அல்லது உலோகத்தால் ஆனதாகும். இவ் வளையத்தில் வலை கட்டப்பட்டிருக்கும். மேற்படி வளையம் ஒரு கைப்பிடியில் பொருத்தப்பட்டிருக்கும். மரபு ரீதியில் தொழிலில் ஈடுபடும் மீனவரிடையே இது பிரபலமானது. சுமார் ஒரு நூற்றாண்டு காலந்தொட்டு இந் நாட்டில் மீன்களைப் பிடிப்பதற்கு இது பயன்பட்டு வருகிறது.




அத்தாங்கு முறையில் மீன் பிடித்தல்

இரவு வேளைகளில் 'சூழ்' அல்லது லாந்தர் விளக்கு அல்லது தீப்பந்தம் கொழுத்தப்படும்போது அவ் வெளிச்சம் நாடி மீன்கள், இறால்கள் போன்றவை கவரப்பட்டு மேற்பரப்புக்கு வருகின்றன. இவ்வேளை அத்தாங்கு மூலம் அவை ஏந்திப் பிடிக்கப்படுகின்றன.

அத்தாங்கின் பயன்பாடு இடம், நீர் நிலைகள், தேவைகள் போன்றவற்றைக்கொண்டு வேறுபடுகின்றது. சிறிய இடங்கள், சதுப்பு நிலங்கள், பற்றைகள், கரைகள் போன்றவற்றிலுள்ள மீன்களை வடித்து பிடிப்பதற்கும், அதே வேளை நீர்நிலைகள், பெரிய மீன்பிடிவலைகளில் (உதாரணம் - கரைவலை) போன்றவற்றில் பிடிக்கப்பட்ட மீன்களை அள்ளிஎடுத்து, கூடைகளில் கொட்டுவதற்கும், இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கும் பயன்படுகின்றது. இதனை விட மேலும் பல பயன்பாடுகளும் அத்தாங்கிற்கு இருக்கின்றன.

மீனவனுக்கு மீன்கள் கூலியாக, பங்காக கொடுக்கப்படும் போது அந்த மீன்களை அத்தாங்கிற்குள் போட்டு, ஒரு முறுக்கிட்டு தங்களது வீட்டுக்கு தோளில் வைத்து காவிக் கொண்டும் செல்வார்கள். அத்தாங்கு வடிவமும் அதன் பெயரும் இடத்துக்கு இடம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் கட்டண...

கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வாடகைக்கு செலுத்தும் முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண மீற்றர் பொருத்தாமையினால் முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவது, உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

போக்குவரத்து அதிகார சபையின் கணக்கெடுப்பின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட முச்சக்கரவண்டிகள் சேவையில் உள்ளதாகவும், ஆனாலும் யாழ்ப்பாண நகரப் பகுதியில் 2025 முச்சக்கரவண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஜூலை மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக வாடகைக்கு சேவையில் ஈடுபடும், சகல முச்சக்கரவண்டிகளிலும் கட்டணமானி பொருத்தப்பட வேண்டும். பதிவு செய்யப்பட வேண்டும்.

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தப்படாத முச்சக்கரவண்டிகளை வாடகை வண்டியாக பாவிப்பதற்கு அனுமதி மறுக்கப்படும், தரிப்பிடங்களில் தரித்து நிற்பதற்கான பதிவுகளை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதே போன்று கட்டணமானி பொருத்தாத முச்சக்கரவண்டிகளுக்கு புதிய பதிவுகளை மேற்கொள்ள அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தார். (ம-7,9)



















## பதப்படுத்தி...

கதலி வாழைப்பழத்தை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வாழைக்குலைகளானது பதப்படுத்தி டுபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இந்த திட்டத்திற்கு 700 விவசாயிகளிடமிருந்து வாழைக்குலைகள் எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் தற்போது 300 விவசாயிகளிடமிருந்தே வாழைக் குலைகள் கிடைப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விவசாய அமைச்சின் கீழ் உள்ள விவசாய நவீனமயமாக்க திட்டத்தின் கீழ் உலக வங்கியின் அனுசரணையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்காக பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்று காணப்படுகிறது. இதன்மூலம் வாரத்துக்கு 40 ஆயிரம் கிலோ வாழைக் குலைகள் தற்போது ஏற்றுமதி செய்ய முடிகிறதாக கூறப்படுகிறது. 10 ஆயிரம் கிலோவிற்கு 12 ஆயிரம் டொலர்கள் வருமானமாக ஈட்ட முடியும் என கூறப்படுகின்றது. (ம-7,9,104)

## கட்டுப்பாட்டில்...

கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவள திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் பிடியில் இருக்கும் விவசாய மற்றும் தனியார் காணிகள் விடுவிக்கப்படும். இந்த காணிப் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பல கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதுடன் அண்மையில் இது தொடர்பாக ஜனாதிபதியிடம் முறையிட்டதைத் தொடர்ந்து 1985ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வரைபடத்திற்கு அமைவாக காணி நிர்ணயம் செய்வதற்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இதன் அடிப்படையில் வனவள திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் பிடியில் இருக்கும் விவசாய மற்றும் தனியார் காணிகள் ஓரிரு மாதங்களில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார். (ம-7,9,315)

## மணல் அகழ்வு...

ஞானம் சிறீதரன் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில் பிரதேச செயலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது

இதனையடுத்து இவ்வாறான மணல் அகழ்வுகளின் பின்னணியிலும் போதைப்பொருள் வியாபாரத்தின் பின்னணியிலும் பொலிஸாரே செயற்பட்டு வருகின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பகிரங்கமாக சுட்டிக்கட்டியிருந்தனர் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தொடந்து குறிப்பிடுகையில்,

நேற்றைய தினம் (நேற்று முன் தினம்) மணல் மாபியாக்களின் முழு ஒத்துழைப்புடன் கிளிநொச்சியில் பொலிஸாரால் விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

என்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸாருக்கு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கடிதம் எழுதுகின்றபோது அந்த கடிதத்தினை மண் மாபியாக்களுக்கே காட்டியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக் காட்டி இருந்தார்.

இதேவேளை மாவட்டத்தில் இடம் பெறுகின்ற அத்தனை சட்டவிரோத செயல்களுக்கு பின்னணியிலும் பொலிஸாரே இருக்கின்றார்கள் அதேநேரம் மாவட்டத்திலே சேவையாற்றுகின்ற அதிகாரிகளால்நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார் (ம-7,9,315)

## தையி...

குறித்த இடத்தினை சுற்றி பொலிஸ் மற்றும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதோடு போராட்டக் காரர்களை கைது செய்ய முயற்சி செய்ததனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

வலி.வடக்கு தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை அபகரித்து பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பருத்தித்துறை வீதி, தையிட்டி கலைவாணி வீதி முகப்பில் நேற்று புதன்கிழமை பிற்பகல் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் பேரணியாக நகர்ந்து தையிட்டி விகாரை வரை சென்றுவிகாரைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பொதுமக்களின் காணிக்குள் அத்துமீறி கட்டப்பட்ட விகாரையை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

14 குடும்பங்களுக்கு சொந்தமான அண்ணளவாக 100 பரப்பு காணியை விடுவிக்கக் கோரியும் சட்டவிரோதமாக கட்டப்பட்ட பௌத்தக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும் பௌத்தமயமாக்கல் திணிப்பை எதிர்த்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் காரணமாக விகாரை முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம-7,9,33,104)

## அதிகூடிய...

பொலநறுவை மாவட்டத்திலும் 100 மில்லிமீற்றர் வரையான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் 75 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணத்தில் 74.8 மில்லிமீற்றர் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (ம-7,9)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறு சீரமைப்பு தீர்மானம் எடுக்கவில்லை

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

தேசிய மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஆபத்து ஏற்படவுள்ளதாக போலி வதந்திகள் பரப்பப்படுகின்றன.

நாணய நிதியத்தின் ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தப்பட்டதைப் போன்று கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் வெளிப்படைத் தன்மையுடனேயே முன்னெடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று புதன்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இறுதித் தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை. எனினும் இதனை அடிப்படையாகக் கொண்டு சில தரப்பினரால் போலி பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதற்கமையவே ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் வதந்திகளைப் பரப்புகின்றனர். எனினும் இவை உண்மைக்கு புறம்பானவையாகும்.

தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் பொருளாதார நிபுணர்களுடன் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளும் இன்னும் நிறைவடையவில்லை. இதற்காக பிரான்ஸின் லசார்ட் மற்றும் கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனங்கள் வெளிநாட்டு கடன் வழங்குனர்களிடம் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றன.

இவற்றுடன் மத்திய வங்கி , நிதி அமைச்சு மற்றும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் ஏனைய நாடுகளின் நிதி அமைச்சு உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் நீண்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றன. எவ்வாறிருப்பினும் எந்தவொரு தரப்பினருடனும் இதுவரையிலும் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை.

நாட்டுப் பிரஜைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கடன் மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எனவே, அரசாங்கம் எதைச் செய்தாலும் வெளிப்படைத் தன்மையுடன் செய்யும். அதன் காரணமாகவே இம்முறை நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்றார். (ம-7,9)

## போரில் வென்ற...

எதிராகப் போராடிய மக்களை பொலிஸார் எச்சரித்துள்ளனர். வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் போராட்டகாரர்களை அச்சுறுத்தி பொலிஸார் அவர்களை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக தையிட்டி பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது.

மேலும் குறித்த பகுதிக்குள் ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்கள் யாரும் உள்நுழைய முடியாதவாறு பொலிஸார் வாகனங்களை வீதிக்கு குறுக்கே நிறுத்தி தடையேற்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் உள்ளிட்ட சிலர் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக போராட்ட பகுதிக்குள் இவர்கள் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும், குறித்த பகுதிக்குச் சென்ற சட்டத்தரணி சுகாஸை போராட்ட பகுதிக்குள் நுழையவிடாது இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளதுடன் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து போராட்டப்பகுதியினை சுற்றி இராணுவத்தினர் முள் வேலிகளை அமைத்து வருகின்றமையினால் அப்பகுதியில் பொதுமக்கள் அதிகளவு ஒன்றுக்கூடியுள்ளதுடன் தொடர்ந்தும் பதற்றமான சூழல் நிலவியது.(ம-7,9,33)

## ஆரிய குளத்தில்...

கடந்த வருடம் ஆரியகுளத்தினுள் மத அனுஷ்டானங்களை நிகழ்த்த யாழ் மாநகரசபை தடை விதித்திருந்தது. இராணுவம்அனுமதிகோரியும்யாழ்மாநகர சபை வெசாக் நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கவில்லை.

இந்நிலையில் வெசாக் நிகழ்வுகளுக்கான அலங்காரங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.யாழ். மாநகர சபை கலைந்துள்ள நிலையில் இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு சமூக ஆர்வலர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். (ம-7,9,33)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15455)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

VILLAGE HOTEL
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்
077 544 8503
(15337)

IELTS - New Batch ஆரம்பம்
Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
(15419)
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு :- ஜெயம் (15452)
077 814 7389, 077 986 5457

தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நிலை, கதவு, யன்னல் மற்றும் ஏனைய தச்சு வேலை செய்யக்கூடிய தச்சு வேலையாள் (Carpenter) தேவை. (15457)
077 777 0969
076 760 0403

வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும்
Fancy & Gift Centre ற்கு
வேலையாட்கள் (பெண்கள்)
தேவை
077 210 5286

விற்பனைக்கு
59.டொல்பின் ஹயஸ்
சுப்பர் G.L
கட்ட மொடல்
127.Navalar Road jaffna
077 592 5450

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு (C-6479)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை
தொடர்புகளுக்கு :- ஜெயம் (15452)
077 814 7389, 077 986 5457

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு
(நிலப்பரப்பு)
- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km

பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15459)
076 755 8606 ,077 638 5683


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.